**Publication:** Dinamalar

**Date:** 26/08/2015

**Page no.:** 05

**Headline:**Kotagiri students' regional winners of TCS IT Wiz quiz

# வினாடி – வினா போட்டியில் கோத்தகிரி மாணவர்கள் முதலிடம்



■ வினாடி – வினா போட்டியில், முதலிடம் பிடித்த கோத்தகிரி மாணவர்கள் பைஜூன், சுதர்சனா.

**கோவை, ஆக. 26–**

கோவையில் 'டி.சி.எஸ்' நிறுவனம் சார்பில் நடந்த, வினாடி – வினா போட்டியில், கோத்தகிரி மாணவர்கள் முதலிடம் பிடித்தனர்.

கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில், டாடா கன்சல்டன்சி சர்வீஸ்சஸ் (டி.சி.எஸ்)' நிறுவனம் சார்பில், பள்ளி மாணவர்களுக்கான வினாடி–வினா போட்டி நேற்று நடந்தது. கோவை, குன்னுார், கோத்தகிரி, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு, சேலத்தை சேர்ந்த, 71 பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.

இறுதிச்சுற்று போட்டியில், கோத்தகிரி செயின்ட் ஜூட்ஸ் பப்ளிக் ஸ்கூல் மாணவர்கள் பைஜூன், சுதர்சனா ஆகியோர், முதலிடம் பெற்றனர். ஜி.கே.டி பள்ளி மாணவர்கள் சரத் சந்தர், ஹரிகிருஷ்ணா குழு, 60 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தது. வெற்றி பெற்ற அணியினருக்கு பதக்கம், பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. பரிசுகளை, டி.சி.எஸ்., வங்கி மற்றும் நிதி சேவை வணிக பிரிவு தலைவர் கீர்த்திவாசன் வழங்கினார்.